

# அமலபாரதம்

*தூய்மையே ஆரோக்கியம்* *தூய்மையான பாரதம்* *எழில்கொஞ்சும் பாரதம்*

இயற்கை இன்று எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தல் சுற்றுச்சூழல் மாசடைவதே ஆகும். மனிதன் உபயோகித்து வெளியேற்றும் கழிவுகளால் வாயு, நீர், மண், உணவு என அனைத்தும் விஷமயமாக ஆகிவிட்டன. எத்தனையோ உயிரினங்களின் தலைமுறைகள் அடி யோடு அழிந்துவிட்டன. பெற்ற தாயைப் போல் நமக்கு அடைக்கலமும், ஆதரவும் அளிக்கும் பூமித்தாய்க்கு நாம் மரணகீதம் பாடுகிறோம். நாம் விழிப்படைந்து செயல்பட்டே ஆகவேண்டும். இதற்குமேலும் தாமதிப்பது கூடாது. நம் ஒவ்வொருவரின் அன்பும், கருணையும் கூடிய செய லாற்றல் இன்று பூமித்தாய்க்கு மிகவும் அவசியமாகும். பூமியில் உயிரினங்கள் வாழவேண்டுமெனில், மனிதகுலம் அழியவேண்டும் என்ற நிலை வருவது கூடாது.

மனிதனுக்கு அருளை மட்டுமே வாரி வழங்குகின்ற கண்கண்ட தெய்வமாகத் திகழ்வது இப்பூமி. இந்த பூமியை, இயற்கையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொரு வருக்கும் உண்டு. உண்ணவும், உறங்கவும் மறக்காதது போல், இதையும் நாம் மறக்கக்கூடாது. பூமியை மாசடைவதிலிருந்து காப்பது, நாம் இவ்வுலகில் உயிர்வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாத தேவையாகும். இதற்குள்ள முயற்சி நம் வாழ்வில், அன்றாட பழக்கங்களில் ஒன்றாக மாறவேண்டும்.

குப்பை கூளங்களை கவனமின்றி கொட்டுதல், பொது வழிகளிலும், பாதையோரங்களிலும் எச்சில் துப்புதல், மல மூத்திரம் கழித்தல் போன்ற பிரச்னைகள் மிகவும் அதிகரித்து வரும் நாடுகளில் பாரதமும் ஒன்றாகும். பாரதமாதாவின் தூய முகம், மாசுகளால் அவலட்சணம் ஆகாமல் இருக்கவும், நமது நாட்டில் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும், ஸ்ரீமாதா அமிர்தானந்தமயி தேவியின் சங்கல்பப்படி செயல்படுத் தப் படும் திட்டமே “அமலபாரதம்.” பூமியை மாசுகளிலிருந்து விடுவிக்கும் இந்த மகாயக்ஞத்தில் பங்குகொள்ள அனை வரையும் நாங்கள் இதயபூர்வம் அன்போடு அழைக்கிறோம். தங்களால் இயன்றவகையில் இதன் வெற்றிக்காக உதவுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

*- மாதா அமிர்தானந்தமயி மடம்*

தூய்மையின்மை என்ற பெயரில் நாம் பிற நாடுகளுக்குமுன்னால் தலைகுனியும் நிலை வரக்கூடாது. வீடு, சுற் றுப்புறம், பொது இடங்கள் ஆகியவற்றைத் தூய்மையுடன் வைத் திருப்பதை ஒரு யக்ஞமாகக் கருதவேண்டும். உண்டு, உறங்குவது போல், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதும் தினசரி வாழ்வின் ஒரு பாகமாக மாறவேண்டும்.

-அம்மா







## *பொதுமக்கள் கவனத்திற்கு*

குப்பைகூளங்களையும், உபயோகத்திற்கு உதவாத பொருள்களையும் வெளியில் வீசி எறியாதீர்கள். அவற்றை சேகரிப்பதற்காக வைக்கப்படும் பீப்பாய்களில் போடவும்.

பொது இடங்களிலும், பொது சாலைகளிலும் மல, மூத்திரம் கழிப்பதைத் தவிர்க்கவும். துப்பாதீர்கள்.

இரண்டு கைக்குட்டைகளைக் கையில் வைத்திருக்கவும். ஒன்றை சாதாரண உப யோகத்திற்கும், மற்றொன்றை தேவை ஏற் பட்டால் துப்புவதற்கும் உபயோகிக்கவும். இப்படி உபயோகித்த கைக்குட்டைகளை சோப்பு போட்டு துவைத்து மீண்டும் உபயோ கியுங்கள்.

பிளாஸ்டிக் பொருள்களை உபயோகிப்பதை இயன்ற வரை குறைக்கவும்.

குப்பைகளை அகற்றுவதுடன், அவற்றைக் குழியில் போட்டு மூடுவதற்கும், சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கவும்.

ABC
Amala Bharatham Campaign

**அமலபாரதம்**


மாதா அமிர்தானந்தமயி மடம்
கொல்லம் (அஞ்சல்) 690 525
போன்: 0476 2897578 www.e.amritapuri.org/abc


தயவுசெய்து இதைப் படித்தபிறகு பிறருக்குப் படிக்கக் கொடுக்கவும்.